# பெரம்பலூர் நகராட்சி

**2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் – 30 ம் நாள் திங்கள் கிழமை மாலை 4.30 மணி அளவில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

**தலைமை : தனிஅலுவலர் (ம) ஆணையாளர்(பொ)**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 30-09-2019 | **பொருள் 01 :** பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பெரம்பலூர் அவர்களின் 19.08.2019 ம் நாளிட்ட செயல்முறை உத்தரவு கடிதத்தில் (செ.மு.எண் அ5/2213/2019 நாள் 19.08.2019) பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட அரணாரை பெரியசாமி கோயில் செல்லும் இணைப்பு சாலை அமைக்கும் பணிக்கு ரூ.9.90 இலட்சத்தில் மதிப்பீட்டுத் தொகைக்கு நிர்வாக அனுமதி அளித்து கடிதம் வரப்பட்டுள்ளது. மேற்படி நிர்வாக அனுமதி உத்தரவிடப்பட்ட கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அ.கு 1. மன்றம் பதிவு செய்யலாம்<br><br>2. மேலும் மேற்கண்ட பணி திட்டப்பணி என்பதால் பணி முடித்து அரசுக்கு அறிக்கை சமர்பிக்க இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடரப்பட்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண் : 6270/2019/இ1 | நகர்மன்றத் தீர்மான எண் 148 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 30-09-2019 | **பொருள் 02 :** பெரம்பலூர் நகராட்சி பொறியர் பிரிவில் அலுவலக பயன்பாட்டில் உள்ள கணிணியின் மோடம் ( Modam) பழுதாகி அலுவலக பணியில் சுனக்கம் ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி பழுதுகளை மோடம் புதியதாக வாங்கி பொருத்தப்பட்ட வகையில் பட்டியல் தொகை ரூ. 1950/— யை இவ்வலுவலக பொது பணி மேற்பார்வையாளரால் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பட்டியல் தொகையினை பொதுப்பணி மேற்பார்வையாளர் திரு.வி.ஜி. குமரன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அ.கு** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>2. மேலும் மேற்கண்ட அலுவலகப் பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கப்பட்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண் : 007860/2019/இ1 | நகர்மன்றத் தீர்மான எண் 149 அனுமதிக்கப்பட்டது |
| 30-09-2019 | **பொருள் 03 :** பெரம்பலூர் நகராட்சி பொறியர் பிரிவில் உள்ள கணியின் 2 GB Ram பழுதாகி விட்டதால் அலுவலக பணியில் சுனக்கம் ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட 2 GB Ram பதிலாக 4 GB RAM புதியதாக வாங்கி பொருத்தப்பட்ட வகையில் பட்டியல் தொகை ரூ. 2400/—/ யை இவ்வலுவலக பொதுப்பணி மேற்பார்வையாளரால் திரு. திரு. வி.ஜி. குமரன் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகையினை அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**டிஅ.கு**<br><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>2. மேலும் மேற்கண்ட அலுவலகப் பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கப்பட்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண் : 007860/2019/இ1 | நகர்மன்றத் தீர்மான எண் 150 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 30-09-2019 | **பொருள் 04 :** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 3 ல் உள்ள அங்காயி கோவில் குளத்தினை நகர்புற பகுதியில் நீடித்த நீர் பாதுகாப்பு பணி செயல்படுத்தும் விதமாக மேற்படி மேற்படி குளத்தினை மேம்படுத்தும் பணி மேற்கொள்ள ரூ.35.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர்வடிவால் வாரியம் மூலம் தயார் செய்து அனுப்பபட்டதை தொடர்ந்து நிர்வாக இயக்குநர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தலைமை அலுவலகம் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் Pro No. 280416/HG wing /DLC / SUWASAM/ 2018 நாள் . 13.09.2019 ன்படி கீழ் கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி அளித்து உத்தரவு கடிதம் வரப்பெற்றுள்ளது.<br><br>**Project Cost . Rs. 35.00 lakhs**<br><br>**Suwasam Share – Rs. 17.50 lakhs**<br><br>**Balance amount to be met out by ULB - Rs. 17.50 lakhs**<br><br>மேற்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் நகராட்சியின் பங்களிப்பு தொகையினை நகராட்சி பொது நிதியில் ஈடு செய்து கொள்ளவும் மற்றும் மேற்கண்ட பணிக்கு ரூ.35.00 இலட்சத்திற்கு தொழில்நுட்ப அனுமதி வேண்டி மண்டல நிர்வாக இயக்குநர் தஞ்சாவூர் அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அ.கு1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>2. மேலும் மேற்கண்ட நிதியில் நகராட்சியின் பங்களிப்பு தொகையினை பொது நிதியில் ஈடு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண் : 004024/2019/இ1 | நகர்மன்றத் தீர்மான எண் 151 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 30-09-2019 | **பொருள் 05 :** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அனைவருக்கும் பாதாள சாக்கடை இணைப்பு பெறுவதற்கு வட்டி இல்லாத கடனாக TUFIDCO நிறுவனத்தின் மூலம் கடன் பெறப்பட்டு 4700 எண்ணிக்கை கொண்ட வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்பு பெறுவதற்கு வகைபாடு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.30544/UGSS- 2017 நாள்.25.01.2018 அனுமதி வழங்கப்பட்டு இந்நகராட்சி மூலம் 22.02.2018 ம் நாளன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s.Infra என்ற நிறுவனத்திற்கு 05.02.2018 ம் நாளன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு தற்போது நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.<br><br>இந்நிலையில் மேற்கண்ட 4700 எண்ணிக்கையில் 3385 எண்ணிக்கையில் வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்கப்பட்டு மீதமுள்ள 1315 இணைப்புகள் வழங்க நகராட்சிக்குட்பட்ட விரிவாக்கம் மற்றும் விடுப்பட்ட பகுதிகளில் கழிவு நீர் மெயின் குழாய் இல்லாததால் மேற்கண்ட மீதமுள்ள இணைப்புகள் வழங்க காலதாமதம் ஏற்படுகிறது. எனவே கடன் பெறப்பட்ட தொகைக்கு ஈடு செய்யவும் மேலும் விடுப்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்க கழிவு நீர் பகிர்மான குழாய்கள் மற்றும் மெயின் குழாய்கள் அமைத்து இணைப்புகள் வழங்கமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 18.09.2019 ம் நாளிட்ட கூட்ட ஆய்வில் தெரிவித்ததின் பேரில் ரூ.120.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களிடம் தொழில் நுட்ப அனுமதி பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அ.கு<br><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண் : 8057/2019/இ1 | நகர்மன்றத் தீர்மான எண் 152 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 28-08-2019 | **பொருள் 06 :** பெரம்பலூர் நகராட்சி பெரம்பலூர் வடக்கு கிராம புலஎண்.268/5, 6Part,9, 10, 270/8, 9 -ல் 10.00 ஏக்கர் 27 செண்ட் (447361.20 ச.அ) என்ற பரப்பளவு **ரோஸ் கார்டன் விரிவாக்கம்** இடத்தில் மனுதாரர் திரு.அற்புதமணி, த/பெ. மாணிக்கம், வெங்கடேசபுரம், பெரம்பலூர் என்பவரால் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர், பெரம்பலூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.1746/2018/பெ.ம, நாள்.21.12.2018 மற்றும் மனைப்பிரிவிற்கு ம.வ/ந.ஊ.உ.இ (பெ.ம).எண்.274/2018 என எண்ணிடப்பட்டு கொள்கை அளவிலான மனைபிரிவு ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்.<br><br>மனுதாரர் பெரம்பலூர் வடக்கு கிராம புலஎண்.268/5, 6Part,9, 10, 270/8, 9 -ல் 10.00 ஏக்கர் 27 செண்ட் (447361.20 ச.அ) என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவில் 198 எண்ணிக்கை மனைகளில் விற்கப்பட்ட மனைகள் 90 எண்ணிக்கை நீங்கலாக மீதமுள்ள 108 மனைகளில் மனைஎண்.211, 212, 243, 244, 256, 257 மற்றும் 258 ஆகிய 7மனைகளை வரன்முறைப்படுத்தி அனுமதி வழங்கிட கோரியுள்ளார்.<br><br>மனுதாரர் மேற்படி மனைபிரிவில் அமைக்கப்பட்டுள்ள மனைஎண்.211, 212, 243, 244, 256, 257 மற்றும் 258 ஆகிய 7 எண்ணிக்கை மனைகளை வரன்முறைப்படுத்துவதற்கு வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் ஆகியவற்றை செலுத்தியுள்ளார். மேற்படி மனைபிரிவில் பொதுஉபயோக பயன்பாட்டிற்கான பொது திறவிடங்கள், பூங்கா மற்றும் பொதுபாதைகள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்டுள்ளவாறு பொதுபாதைகள் மற்றும் பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது திறவிடங்கள் ஆகியவற்றினை திரு.அற்புதமணி த/பெ. மாணிக்கம், **இனாம் சாசனம்** பத்திர பதிவு ஆவணம் எண்.5092/2019-ன்படி பெரம்பலூர் சார்பதிவகத்தில் 09.09.2019-ல் நகராட்சி ஆணையருக்கு இனாம் சாசனம் பத்திர மூலமாக பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. தான பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்ட சாலைகள், பூங்காக்கள் மற்றும் பொதுதிறவிடங்கள் விபரம் பின்வருமாறு.<br><br>1. **இனம்1,2- வது தென்வடலான பாதை:** மனை எண்கள்.106, 95, 58, 47, 163, 154, 152, 143, 142, 133- இவைகளுக்கும், 9, 8, 5, 4, 1-வது கிழமேலான பாதைகளுக்கும், நிலுவையிலுள்ள கிழமேல் பாதைக்கும் கிழக்கு, பூங்கா இடத்துக்கும், மனை எண்கள்.105, 96, 57, 48, 215, 214, 191, 190, 166, 165, 164–க்கும் மேற்கு, சர்வே எண்.268/2-நிலத்துக்கும் தெற்கு, சர்வே எண்.270/10A–நிலத்துக்கும், 14வது தென்வடல் பாதைக்கும் வடக்கு இதில் 11, 827 1/2 சதுரஅடி கொண்ட தென்வடல் பதையும்,<br>ஷை பாதை U.D.R. சர்வே எண். 268/6A1Aஹெக்டேர் 1.08.72-ல் ஹெக்டேர் 0.57.00–ஏர்ஸில் கட்டுப்பட்டுள்ளது | நகர்மன்றத் தீர்மான எண் 153 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 30-09-2019 | 1. **இனம்2,3- வது கிழமேலான பாதை:** 2வது தென்வடலான பாதைக்கும் கிழக்கு, 20 அடி அகலமுள்ள நிலையிலுள்ள தென்வடலான பாதைக்கும் மேற்கு, மனை எண்கள். 166 To 178–க்கும் தெற்கு, மனை எண்கள். 179 To 190-க்கும் வடக்கு இதில் 7,510 சதுரஅடி கொண்ட கிழமேல் பாதையும்<br>ஷை பாதை அ.பு.சர்வே எண்.268/6A1A ஹெக்டேர் 1.08.72-லும்,<br><br>U.D.R. படி புது சர்வே எண்.268/5 ஹெக்டேர் 0.68.00–லும் கட்டுப்பட்டுள்ளது.<br><br>**3. இனம்3, 6- வது கிழமேலான பாதை:** 2வது தென்வடலான பாதைக்கம் கிழக்கு, சர்வே எண்.269/3–நிலத்துக்கும், 13வது தென்வடலான பாதைக்கும் மேற்கு, மனை எண்கள்.191 To 202-க்கும் தெற்கு, மனை எண்கள். 203 To 214-க்கும் வடக்கு இதில் 7,485 சதுரஅடி கொண்ட கிழமேல் பாதையும்,<br><br>ஷை பாதை U.D.R.படி அ.பு.சர்வே எண்.268/6A1A ஹெக்டேர் 1.08.72-ல்,<br><br>ஹெக்டேர் 0.57.00–ஏர்ஸிலும்,<br><br>U.D.R. ப புது சர்வே எண்.268/5 ஹெக்டேர் 0.68.00–லும் கட்டுப்பட்டுள்ளது.<br><br>4. **இனம் 4, 7- வது கிழமேலான பாதை:** 2வது தென்வடலான பாதைக்கும் கிழக்கு, 13வது தென்வடலான பாதைக்கும் மேற்கு, மனை எண்கள். 215 To 225–க்கும் மனை எண்.227–க்கும் தெற்கு, மனை எண்கள். 228 To 234-க்கும், மனை எண்கள். 52, 48–க்கும்.<br><br>ஷை மனைப்பிரிவில் மீதமுள்ள இரண்டு மனைகளுக்கும் வடக்கு இதில் 7,460 சதுர அடி கொண்ட கிழமேல் பாதையும்,<br><br>U.D.R.சர்வே எண்.268/9 ஹெக்டேர் 0.33.50–ல், ஹெக்.0.16.50–ஏர்ஸிலும்,<br><br>U.D.R.சர்வே எண்.268/10 ஹெக்டேர் 0.34.50–ல், ஹெக்.0.17.00–ஏர்ஸிலும் கட்டுப்பட்டுள்ளது | |

| | | |
|---|---|---|
| 30-09-2019 | **இனம் 5, 10- வது கிழமேலான பாதை:** 2வது தென்வடலான பாதைக்கும் கிழக்கு, 13வது தென்வடலான பாதைக்கும் மேற்கு, மனை எண்கள்.235 To 240–க்கும் , மனை எண்.242-க்கும், மனை எண்கள்.57, 53–க்கும், ஷை மனைப்பிரிவில் மீதமுள்ள 96 To 100–க்கும்.<br><br>ஷை மனைப்பிரிவில் மீதமுள்ள இரண்டு மனைகளுக்கும் வடக்கு இதில் 7460 சதுரஅடி கொண்ட கிழமேல் பாதையும்,<br><br>U.D.R.சர்வே எண்.268/9 ஹெக்டேர் 0.33.50–ல், ஹெக்.0.16.50–ஏர்ஸிலும்,<br><br>U.D.R.சர்வே எண்.268/10 ஹெக்டேர் 0.34.50–ல், ஹெக்.0.17.00–ஏர்ஸிலும் கட்டுப்பட்டுள்ளது<br><br>6. **இனம் 6, 11- வது கிழமேலான பாதை:**நிலையிலுள்ள பாதைக்கும் கிழக்கு, 13வது தென்வடலான பாதைக்கும் மேற்கு, மனை எண்கள்.250 To 255–க்கும் மனைஎண்.257–க்கும் மனை எண்கள்.104, 105-க்கும், ஷை மனைப்பிரிவில் மிதமுள்ள இரண்டு மனைகளுக்கும் தெற்கு, மனை எண்கள்.258 To 264–க்கும் மனை எண்கள்.139, 143–க்கும், ஷை மனைப்பிரிவில் மீதமுள்ள இரண்டு மனைகளுக்கும் வடக்கு இதில் 5575 சதுரஅடி கொண்ட கிழமேல் பாதையும்,<br><br>U.D.R.சர்வே எண்.270/8 ஹெக்டேர் 0.18.50–லும்,<br><br>U.D.R.சர்வே எண்.270/9 ஹெக்டேர் 0.23.00–லும் கட்டுப்பட்டுள்ளது<br><br>7. **இனம் 7, 12- வது கிழமேலான பாதை:** 14–வது தென்வடலான பாதைக்கும் கிழக்கு, 13–வது தென்வடலான பாதைக்கும் மேற்கு, மனை எண்கள். 265 To 271–க்கும், மனை எண்கள். 148, 144–க்கும். ஷை மனைப்பிரிவில் மீதமுள்ள இரண்ட மனைகளுக்கும் தெற்கு, சர்வே எண்கள்.270/10A, 270/10B–நிலத்துக்கும் வடக்கு இதில் 8322 1/2 சதுரஅடி கொண்ட கிழமேல் பாதையும்,<br><br>U.D.R.சர்வே எண்.270/8 ஹெக்டேர் 0.18.50–லும்,<br><br>U.D.R.சர்வே எண்.270/9 ஹெக்டேர் 0.23.00–லும் கட்டுப்பட்டுள்ளது | |

| | | | |
|---|---|---|---|
| 30-09-2019 | **இனம் 8, 13- வது தென்வடலான பாதை:** 6, 7, 10, 11, 12–வது கிழமேலான பாதைக்கும், மனை எண்கள். 271, 258, 257, 256, 243, 242, 241, 228, 227, 226, 203–க்கும் கிழக்கு, சர்வே எண்.269/3 நிலத்துக்கும் மேற்கு, சர்வே எண்.269/1-நிலத்துக்கும் தெற்கு, சர்வே எண்கள்.270/10A, 10B–நிலத்துக்கும் வடக்கு இதில் 10968.38 சதுர அடி கொண்ட தென்வடல் பாதையும்<br><br>U.D.R.படி புது அ.பு.சர்வே எண்.268/5 ஹெக்டேர் 0.68.00–லும்,<br><br>U.D.R.சர்வே எண்.268/10 ஹெக்டேர் 0.34.50–ல் ஹெக்.0.17.00–ஏர்ஸிலும் கட்டுப்பட்டுள்ளது<br><br>U.D.R.சர்வே எண்.270/9 ஹெக்டேர் 0.23.00–லும் கட்டுப்பட்டுள்ளது<br><br>9. **இனம் 9, பூங்கா இடம்:** 2–வது தென்வடலான பாதைக்கும் கிழக்கு, நிலையிலுள்ள சாலைக்கும் மேற்கு, சர்வே எண்.268/4–நிலத்துக்கும் தெற்கு, மனை எண்கள்.167 To 176–க்கும் மனை எண்.164-க்கும் வடக்கு இந்த நான்கெல்லையில் 17431 சதுர அடி அளவுள்ள காலியிடமும் (பூங்கா இடம்)<br><br>ஷை பாதை U.D.R.சர்வே எண்.268/6A1A ஹெக்டேர் 1.08.72–லும்,<br><br>U.D.R.படி புது. அ.பு.சர்வே எண்.268/5 ஹெக்டேர் 0.68.00–லும் கட்டுப்பட்டுள்ளது<br><br>மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள விற்கப்படாத மனைகளுக்கு மனுதாரர் கீழ்கண்டுள்ளவாறு மனை வரன்முறைக் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்தியுள்ளார்கள் | |

30-09-2019

| வ. எண் | விபரம் | வசூலிக்கப்பட்ட கட்டணம் | கட்டணம் வசூலிக்கப்பட்ட ரசீதுஎண்/ நாள் | கருவூலகம் வங்கியின் விபரம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | வரன்முறைக்கட்டணம் அரசு தலைப்பில் செலுத்தப்பட்ட விபரம்<br>(Plot Regularaization Charges) | 59085 | 10.09.2019 | (அரசு தலைப்பிற்கு) பாரத மாநில வங்கி பெரம்பலூர். |
| 2 | வளர்ச்சி கட்டணம்<br>(Development charges) | 147750/- | 0000786<br>10.09.2019 | நகராட்சி அலுவலகம், பெரம்பலூர். |

எனவே, மேற்படி பெரம்பலூர் வடக்கு கிராம புலஎண்.268/5, 6Part,9, 10, 270/8, 9 -ல் 10.00 ஏக்கர் 27 செண்ட் (447361.20 ச.அ) என்ற பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள 198 எண்ணிக்கை மனைகளில் விற்கப்பட்ட மனைகள் 90 எண்ணிக்கை நீங்கலாக மீதமுள்ள 108 மனைகளில் மனைஎண்.211, 212, 243, 244, 256, 257 மற்றும் 258 ஆகிய 7மனைகளை எண்ணிக்கை மனைகளை மட்டும் வரன்முறைப்படுத்தி அனுமதி வழங்குவதற்க்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>** அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பெரம்பலூர் வடக்கு கிராம புலஎண்.268/5, 6Part,9, 10, 270/8, 9 -ல் 10.00 ஏக்கர் 27 செண்ட் (447361.20 ச.அ) என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவுகளில் உள்ள மனைஎண்.211, 212, 243, 244, 256, 257 மற்றும் 258 ஆகிய 7 எண்ணிக்கை மனைகளுக்கு மனைபிரிவு அனுமதி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

1. மேற்படி மனைபிரிவில் பொது திறவிடங்கள், பொதுப்பாதைகள் மற்றும் பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்து ஒப்படைக்கப்பட்ட இடங்களை ஆணையர் பெரம்பலூர் நகராட்சி என்ற முகவரிக்கு நிலஉரிமை மாற்றம் செய்ய வட்டாட்சியர் பெரம்பலூர் அவர்களை கேட்டுக்கொள்ளலாம்.
2. மேற்படி மனைபிரிவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பூங்கா இடத்தினை பாதுகாப்பதற்கு நான்கு புறமும் முன்வேளி அமைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 30-09-2019 | **பொருள் 07 :** பெரம்பலூர் நகராட்சி பெரம்பலூர் தெற்கு கிராம புலஎண்.229/12, 3, 5A, 11A, 11B, 12Apt, 226/4C1, 4C2, 227/6pt -ல் 1.00 ஏக்கர் 46 சென்ட் (63507ச.அ) என்ற பரப்பளவு இடத்தில் மனுதாரர் திரு.தமிழ்செல்வன், சிவக்குமார் மற்றும் கீதா 14, மாவட்ட ஆட்சியர் அலுவலக சாலை, அபிராமபுரம் மேற்கு, பெரம்பலூர் என்பவரால் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர், பெரம்பலூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.929/2019/பெ.ம, நாள்.30.08.2019 மற்றும் மனைப்பிரிவிற்கு ம.வ/ந.ஊ.உ.இ (பெ.ம).எண்.120/2019 என எண்ணிடப்பட்டு கொள்கை அளவிலான மனைபிரிவு ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்.<br><br>மனுதாரர் பெரம்பலூர் நகராட்சி பெரம்பலூர் தெற்கு கிராம புலஎண்.229/12, 3, 5A, 11A, 11B, 12Apt, 226/4C1, 4C2, 227/6pt -ல் 1.00 ஏக்கர் 46 சென்ட் (63507ச.அ) என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவில் 41 எண்ணிக்கை மனைகளில் விற்கப்பட்ட மனைகள் 36 எண்ணிக்கை நீங்கலாக மீதமுள்ள 5 மனைகளில் மனைஎண்.6, 7, 41, 53A மற்றும் 54A ஆகிய 5 மனைகளை வரன்முறைப்படுத்தி அனுமதி வழங்கிட கோரியுள்ளார்.<br><br>மனுதாரர் மேற்படி மனைபிரிவில் அமைக்கப்பட்டுள்ள மனைஎண்.6, 7, 41, 53A மற்றும் 54A ஆகிய 5 எண்ணிக்கை மனைகளை வரன்முறைப்படுத்துவதற்கு வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் ஆகியவற்றை செலுத்தியுள்ளார். மேற்படி மனைபிரிவில் பொதுஉபயோக பயன்பாட்டிற்கான பொது திறவிடங்கள், பூங்கா மற்றும் பொதுபாதைகள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்டுள்ளவாறு பொதுபாதைகள் மற்றும் பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது திறவிடங்கள் ஆகியவற்றினை திரு.அற்புதமணி த/பெ. மாணிக்கம், **இனாம் சாசனம்** பத்திர பதிவு ஆவணம் எண்.5028/2019-ன்படி பெரம்பலூர் சார்பதிவகத்தில் 05.09.2019-ல் நகராட்சி ஆணையருக்கு இனாம் சாசனம் பத்திர மூலமாக பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. தான பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்ட சாலைகள், பூங்காக்கள் மற்றும் பொதுதிறவிடங்கள் விபரம் பின்வருமாறு.<br><br>நிலுவையிலுள்ள 23 அடி தென்வடல் பாதைக்கும் கிழக்கு, இதே சர்வேயில் என் மீதி இடத்திற்கும் மேற்கு, மனை எண். 33–க்கும் தெற்கு, இதே சர்வேயில் என் மீதி இடத்திற்கம் வடக்கு, இதில் கிழமேல் ஜாதியடி இருபுறமும் 55 தென்வடல் ஜாதியடி இருபுறமும் 14 உள்ள 770 சதுரடி கொண்ட பூங்கா இடம். | நகர்மன்றத் தீர்மான எண் 154 அனுமதிக்கப்பட்டது |

30-09-2019

ஷை சர்வே தற்கால சப்டிவிசன் படி சர்வேஎண்.229/5A1A1 ஹெக் 0.20.53-லும் பட்டா எண்.**461–**லும் உள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள விற்கப்படாத மனைகளுக்கு மனுதாரர் கீழ்கண்டுள்ளவாறு மனை வரன்முறைக் கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் செலுத்தியுள்ளார்கள்

| **வ. எண்** | **விபரம்** | **வசூலிக்கப்பட்ட கட்டணம்** | **கட்டணம் வசூலிக்கப்பட்ட ரசீதுஎண்/ நாள்** | **கருவூலகம் வங்கியின் விபரம்** |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **1** | வரன்முறைக்கட்டணம் அரசு தலைப்பில் செலுத்தப்பட்ட விபரம் (Plot Regularaization Charges) | 48225 | 17.09.2019 | (அரசு தலைப்பிற்கு) பாரத மாநில வங்கி பெரம்பலூர். |
| **2** | வளர்ச்சி கட்டணம் (Development charges) | 96450/- | 0001523 19.09.2019 | நகராட்சி அலுவலகம், பெரம்பலூர். |

எனவே, மேற்படி பெரம்பலூர் தெற்கு கிராம புலஎண்.229/12, 3, 5A, 11A, 11B, 12Apt, 226/4C1, 4C2, 227/6pt -ல் 1.00 ஏக்கர் 46 செண்ட் (63507ச.அ) என்ற பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள 41 எண்ணிக்கை மனைகளில் விற்கப்பட்ட மனைகள் 36 எண்ணிக்கை நீங்கலாக மீதமுள்ள 5 மனைகளில் மனைஎண்.6, 7, 41, 53A மற்றும் 54A ஆகிய 5மனைகளை எண்ணிக்கை மனைகளை மட்டும் வரன்முறைப்படுத்தி அனுமதி வழங்குவதற்க்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 30-09-2019 | **அலுவலக குறிப்பு:**<br><br>1. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று மேற்படி பெரம்பலூர் தெற்கு கிராம புலஎண்.229/12, 3, 5A, 11A, 11B, 12Apt, 226/4C1, 4C2, 227/6pt -ல் 1.00 ஏக்கர் 46 சென்ட் (63507ச.அ) என்ற பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள 41 எண்ணிக்கை மனைகளில் விற்கப்பட்ட மனைகள் 36 எண்ணிக்கை நீங்கலாக மீதமுள்ள 5 மனைகளில் மனைஎண்.6, 7, 41, 53A மற்றும் 54A ஆகிய 5 எண்ணிக்கை மனைகளுக்கு மனைபிரிவு அனுமதி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி மனைபிரிவில் பொது திறவிடங்கள், பொதுப்பாதைகள் மற்றும் பூங்காவிற்கு ஒதுக்கீடு செய்து ஒப்படைக்கப்பட்ட இடங்களை ஆணையர் பெரம்பலூர் நகராட்சி என்ற முகவரிக்கு நிலஉரிமை மாற்றம் செய்ய வட்டாட்சியர் பெரம்பலூர் அவர்களை கேட்டுக்கொள்ளலாம்.<br>3. மேற்படி மனைபிரிவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பூங்கா இடத்தினை பாதுகாப்பதற்கு நான்கு புறமும் முன்வேளி அமைக்க மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண்.7236/2019/F1** | |
| 30-09-2019 | **பொருள் 08 :** பொதுசுகாதார உபயோக பயன்பாட்டிற்கு தேவையான கிருமி நாசினிகள் மற்றும் கொசுமருந்து தெளிப்பதற்கு தேவையான Temephos 50% EC, Technical Malathion, Pyrethrum 2% Extract மேற்படி கிருமிநாசினி பொருட்கள் வாங்கி வழங்க கோரி துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பு வழங்கியுள்ளார்கள். எனவே, பொதுசுகாதாரப்பணியின் அவசரஅவசியம் கருதி தேவையான கிருமி நாசினிகள் மற்றும் கொசுமருந்து தெளிப்பதற்கு தேவையான பொருட்கள் வாங்குவதற்கும் Paramount Pesticides Limited,2/3, 1'st Floor, Muthukrishnan Street, T.Nagar, Chennai-60017. என்ற நிறுவனத்திற்கு மேற்படி பொருட்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.600000/- (ரூபாய் ஆறு லட்சம்) அனுமதிக்கும் இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளமன்றஅனுமதிவேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br><br>பொது சுகாதார பணிகள் அத்தியாவசிய பணிகள் என்பதாலும் அவசரஅவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பொதுசுகாதார உபயோகத்திற்கு தேவையான கொசுமருந்துகள், கிருமி நாசினிகள் வாங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண்.13857/2018/எச்1** | நகர்மன்றத் தீர்மான எண் **155** அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 30-09-2019 | **பொருள் 09:** இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு கோட்டம்-I-ல் பயன்படுத்தப்பட்டு வரும் பொதுசுகாதார கனரக வாகனம் TN.46E 8967 மினி லாரி வாகனத்திற்கான 6 டயர்கள் சுமார் ஒன்பது ஆண்டிற்கு முன்பாக வாங்கப்பட்டுள்ளது. இவ்வண்டியின் 6 எண்ணிக்கை டயர்கள் மிகவும் தேய்ந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே, இவ்வாகனத்திற்கு புதிய 6 டயர்கள் வாங்கி வழங்ககோரி திரு.ஜி. முருகன், ஓட்டுநர் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளதின்பேரில் துப்புரவு ஆய்வர்கள் குறிப்பு அளித்துள்ளனர். மேற்படி வாகனத்திற்கு புதியதாக டயர்கள் வழங்கிட TAMIL NADU MULTI PURPOSE INDCO SERVE திருச்சி என்ற நிறுவனத்திற்கு சப்பளை உத்திரவு வழங்கிடவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.1,00,000/- (ஒரு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதியும் இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **<u>ஆ.கு:</u>**1. மன்றம் அனுமதிக்கலாம்<br><br>2. பொதுசுகாதார பணியின் அவசரம் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**<u>ந.க.எண்.661/2019/H1</u>** | நகர்மன்றத் தீர்மான எண் 156 அனுமதிக்கப்பட்டது |
| 30-09-2019 | **பொருள் 10:** இந்நகராட்சியின் பொதுசுகாதார பணியின் நகரின் அனைத்து பகுதிகளையும் தூய்மைப்படுத்தும் பணிகள் மேற்கொள்வதற்கும் எதிர்வரும் நாட்களில் வடகிழக்கு பருவமழை பெய்ய உள்ளதாலும் பொதுசுகாதார பணியினை தொய்வின்றி சிறப்பான முறையில் மேற்கொள்ள அதற்கு தேவையான கிருமி நாசினிகள் வழங்க வேண்டியுள்ளது. கிருமி நாசினிகள் வழங்ககோரி துப்புரவு ஆய்வாளரின் 30.08.2019–ம் தேதி தேவைப்பட்டியல் சமர்ப்பித்துள்ளார்கள். மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தேவையான கிருமி நாசினிகள் வாங்குவதற்கும் தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்கோ சர்வீஸ் திருச்சி நிறுவனத்தில் வாங்கிடவும் மேற்படி பொருட்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.300000/-(ரூபாய் மூன்று லட்சம்) அனுமதிக்கும் இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளமன்றஅனுமதிவேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>**1.**மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**2.**மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதிபெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண்.10535/2018/எச்1** | நகர்மன்றத் தீர்மான எண் 157 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 30-09-2019 | **பொருள் 11:** இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு கோட்டம்-I-ல் பயன்படுத்தப்பட்டு வரும் பொதுசுகாதார கனரக வாகனம் TN.46E 8967 மினி லாரி வாகனத்திற்கான 6 டயர்கள் சுமார் ஒன்பது ஆண்டிற்கு முன்பாக வாங்கப்பட்டுள்ளது. இவ்வண்டியின் 6 எண்ணிக்கை டயர்கள் மிகவும் தேய்ந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே, இவ்வாகனத்திற்கு புதிய 6 டயர்கள் வாங்கி வழங்ககோரி திரு.ஜி. முருகன், ஓட்டுநர் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளதின்பேரில் துப்புரவு ஆய்வர்கள் குறிப்பு அளித்துள்ளனர். மேற்படி வாகனத்திற்கு புதியதாக டயர்கள் வழங்கிட உத்தேச செலவினத்தொகை ரூ.1,00,000/- (ஒரு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதியும் இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>பொதுசுகாதா பணியின் அவசர அத்தியாவசியம் கருதி உடனடியாக டயர்கள் புதியதாக வாங்குவதற்கு உள்ளூர் நிறுவனத்தில் விலைப்புள்ளி கோரி அதன் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையும் மன்றத்தின் அனுமதிக்கு<br><br>**<u>அ.கு:</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br><br>2. பொதுசுகாதார பணியின் அவசரம் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று தமிழ்நாடு மல்டிபர்பஸ் திருச்சி என்ற நிறுவனத்தின் மூலம் டயர்கள் சப்ளை செய்ய உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி, நிறுவனத்தில் தற்சமயம் டயர்கள் இருப்பு இல்லை எனவும் அதனை வாங்கி வழங்குவதற்கு 2 மாத கால அவகாசம் வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேற்படி, பணியின் அவசர அத்தியாவசியம் கருதி, உள்ளூர் நிறுவனத்தில் விலைப்புள்ளி கோரி டயர்கள் வாங்க அதன் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**<u>ந.க.எண்.661/2019/H1</u>** | நகர்மன்றத் தீர்மான எண் 158 அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>30-09-2019</td>
<td>
பொருள் 12: இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு கோட்டம்-I-ல் பயன்படுத்தப்பட்டு வரும் கனரக வாகனம் TN.46E 8967 மினி லாரி வாகனத்திற்கான 6 டயர்கள் சுமார் ஒன்பது ஆண்டிற்கு முன்பாக வாங்கப்பட்டுள்ளது. இவ்வண்டியின் 6 எண்ணிக்கை டயர்கள் மிகவும் தேய்ந்து பயன்படுத்த இயலாத நிலையில் இருந்ததை தொடர்ந்து புதிய 6 டயர்கள் வாங்குவதற்கு 12.09.2019 அன்று உள்ளூர் நிறுவனத்தில் விலைப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேற்படி விலைப்புள்ளியின் விபரம் மற்றும் ஒப்புதலுக்கு பட்டியல் பின்வருமாறு.
<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளி விபரம்</th></tr>
<tr><td>1</td><td>ஸ்ரீ பாலாஜி, ஏஜென்ஸீஸ்,<br>99பி/11, புதிய பேருந்து நிலையம், பெரம்பலூர்.</td><td>ரூ.71000/-</td></tr>
<tr><td>2</td><td>எம்.ஆர்.ஜி. டயர்ஸ், திருச்சி மெயின்ரோடு, சமயபுரம்.</td><td>ரூ.72200/-</td></tr>
<tr><td>3</td><td>திருமலையன் டயர்ஸ், ஜெயங்கொண்டம் மெயின் ரோடு, V கைகாட்டி, அரியலூர்</td><td>ரூ.72500/-</td></tr>
</table>
மேற்கண்டுள்ளவாறு பெறப்பட்டுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண்.(1)ல் கண்டுள்ள ஸ்ரீ பாலாஜி, ஏஜென்ஸீஸ், 99பி/11, புதிய பேருந்து நிலையம், பெரம்பலூர் என்ற நிறுவனத்தினால் 6 டயர்களும் சப்ளை செய்வதற்கு ரூ.71000/–க்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளனர். எனவே, குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் மூலம் மேற்படி பொதுசுகாதார கனரக வாகனத்திற்கு 6 டயர்களை சப்ளை செய்வதற்கு அனுமதிப்பதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு:</u>
மேற்படி, பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி புதியதாக 6 டயர்கள் வாங்குவதற்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ பாலாஜி ஏஜென்ஸீஸ், என்ற நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
<u>ந.க.எண்.661/2018/H1</u>
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண் 159 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 30-09-2019 | **பொருள் 13:** இந்நகராட்சியின் பொதுசுகாதார துப்புரவு பணியினை தனியார் நிறுவனத்தின் மூலம் மூன்றாண்டு காலத்திற்கு துப்புரவு பணி மேற்கொள்வதற்கு 110 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பெற்று பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம்ந.க.எண்.407/பி3/2016, நாள்.01.08.2016–ன்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதனைதொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கு உத்தரவிடப்பட்டது. மேலும், உத்தரவிடப்பட்டது. இந்நகர்மன்ற தீர்மானம் எண்.105, நாள்.20.08.2018–ன்படி இவ்வலுவலக செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.8394/2017/எச்1, நாள்.06.09.2018–ன்படி 07.09.2018 முதல் 06.09.2019 முடிய ஓராண்டு காலத்திற்கு மட்டும் பணியாளர்களை வழங்குவதற்கு Our Land Engineering Works Private Limited No.17A, Rajaji Avenue, Valasaravakkam, Chennai அனுமதி நீட்டிப்பு செய்யப்பட்டு மேற்படி, நிறுவனம் ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு பணியாளர்களை வழங்கிட உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.<br><br>எதிர்வரும் 06.09.2019–வுடன் மேற்படி ஒப்பந்தகாலம் முடிவடைகிறது. அரசாணை எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.07.1997–ன்படி மேலும், மூன்றாண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணியாளர்களை அமர்த்திகொள்வதற்கு அனுமதிகோரி கடந்த 20.07.2019-ல் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு மேல் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. இந்நிலையில் பொதுமக்களின் நலன் மற்றும் பொதுசுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்டபணியினை தொடர்ந்து திறம்பட செயல்படுத்துவதற்கு ஏதுவாக தற்சமயம் துப்புரவு பணியை மேற்கொண்டு வரும் Our Land Engineering Works Private Limited No.17A, Rajaji Avenue, Valasaravakkam, Chennai என்ற நிறுவனத்தின் மூலம் மேலும், 6 மாத காலத்திற்கு துப்புரவு பணியினை தொடர மேற்படி நிறுவனத்தின் எழுத்து பூர்வமான சம்மத்தினை தெரிவிக்குமாறு இவ்வலுவலக கடிதம் நாள்.16.08.2019–ன்படி கோரப்பட்டது.<br><br>மேற்படி, Our Land Engineering Works Private Limited No.17A, Rajaji Avenue, Valasaravakkam, Chennai அவர்கள் 16.08.2019–ம் தேதிய நாளிட்ட பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் புதிய தினக்கூலி அடிப்படையில் மேலும் 6 மாத காலத்திற்கு பணியினை தொடர சம்மதம் தெரிவித்துள்ளார். எனவே, மாவட்ட ஆட்சித்தலைவர் பெரம்பலூர் அவர்களின் புதிய தினக்கூலி அடிப்படையில் துப்புரவு பணியினை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவிமான ரூ.90.00 இலட்சம் வழங்குவதற்கும் இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகர்மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. **<u>அலுவலககுறிப்பு</u>**<br><br>அ) இந்நகராட்சியில் துப்புரவு பணியினை மேற்கொள்வதற்கு 110 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் Our Land Engineering Works Private Limited No.17A, Rajaji Avenue, Valasaravakkam, Chennai நிறுவனம் மூலமாக 110 துப்புரவு பணியாளர்களை வழங்குவதற்கு 06.09.2019–வுடன் மூன்றாண்டு காலம் முடிவடையும் நிலையில் மேலும் 6 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை வழங்க காலநீட்டிப்பு செய்து வழங்குவதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ஆ) பொதுசுகாதார துப்புரவு பணிக்காக 6 மாத காலத்திற்கு பணியாளர்களுக்கு வழங்குவதற்கு உரிய ஒப்பந்த தொகையான உத்தேச செலவினமான ரூ.90.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம். | நகர்மன்றத் தீர்மான எண் 160 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 30-09-2019 | **பொருள் 14:** இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு கோட்டம் எண்.I-ல் பயன்படுத்தப்பட்டு வரும் பொதுசுகாதார கனரக வாகனம் TN.46Q.1819 வண்டிக்கான பழுது ஏற்பட்டுள்ளது. இவ்வாகனம் டீசல் பம்ப் செக்கப், கிளர்ச் ஆயில் செக்கப், ஆறு சக்கரங்களுக்கும் பிரேக் செக்கப், எலட்ரீக்கல் வேலை பழுது நீக்கம் செய்ய வேண்டியுள்ளது என திரு.எஸ்.பிரகாஷ், ஓட்டுநரின் விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளதை தொடர்ந்து துப்புரவு ஆய்வாளர் கோட்டம் எண்.I-ல் குறிப்பளித்துள்ளார். மேற்படி, வாகனத்திற்கு உரிமம் புதுப்பித்தல் கட்டணம் 31.03.2020 வரை முடிவடையும் காலத்திற்கு சாலைவரி செலுத்தவேண்டியுள்ளது. எனவே, மேற்படி வாகனத்திற்கு பழுது நீக்கம் பணி மேற்கொள்வதற்கும் உரிமம் புதுப்பிப்பதற்கும் உத்தேச செலவினத்தொகை ரூ.1,50,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதியும் இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு</u><br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொதுசுகாதார பணியின் அவசர அத்தியாவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம். | நகர்மன்றத் தீர்மான எண் 161 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 30-09-2019 | **பொருள் 15:** பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பெரம்பலூர் அவர்களின் **19.08.2019** ம் நாளிட்ட செயல்முறை உத்தரவு கடிதத்தில் **(** செ.மு.எண்.அ**5/2213/2019** நாள். **19.08.2019)** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட அரணாரை பெரியசாமி கோவில் செல்லும் இணைப்பு சாலை அமைக்கும் பணிக்கு ரூ.**9.90** இலட்சத்தில் மதிப்பீட்டுத் தொகைக்கு நிர்வாக அனுமதி அளித்து கடிதம் வரப்பட்டுள்ளது. மேற்படி நிர்வாக அனுமதி உத்தரவிடப்பட்ட கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அ.கு<br><br>**1.** மன்றம் பதிவு செய்யலாம்<br><br>**2.** மேலும் மேற்கண்ட பணி திட்டப்பணி என்பதால் பணி முடித்து அரசுக்கு அறிக்கை சமர்பிக்கப்படுவதால் பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடரப்பட்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண் : 006270/2019/இ1 | நகர்மன்றத் தீர்மான எண் 162 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 30-09-2019 | **பொருள் 16:** இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் அருகில் தென்புறம் உள்ள கடை எண்.24, வரிவிதிப்பு எண்.336 திரு.பாலமுருகன் த/பெ. சுந்தரராஜ் என்பவர் குத்தகைக்கு எடுத்து நடத்திவருகிறார். திரு.பாலமுருகன் த/பெ. சுந்தரராஜ் மற்றும் திரு.ராமச்சந்திரன் த/பெ. கிருஷ்ணன் ஆகிய இருவரும் கடையை கூட்டாக தொழில் நடத்தி வந்ததாகவும் தற்சமயம் மேற்படி கடையின் குத்தகை உரிமத்தை தனது பெயரில் மாற்றி தரும்படி திரு.ராமச்சந்திரன் த/பெ. கிருஷ்ணன் என்பவர் 18.07.2019 அன்று விண்ணப்பம் அளித்துள்ளார். மேற்படி, விண்ணப்பத்துடன் திரு.பாலமுருகன் த/பெ. சுந்தரராஜ் மற்றும் திரு.ராமச்சந்திரன் த/பெ. கிருஷ்ணன் ஆகிய இருவரும் சேர்ந்து எழுதிக்கொண்ட உறுதிமொழி ஆவண பத்திரம் சான்று பெற்று நோட்டரி பப்ளிக் (Notary Public) வழக்கறிஞரிடம் சான்றொப்பம் பெற்று அளித்துள்ளார். மேற்படி, உறுதிமொழி பத்திரத்தில் தற்சமயம் திரு.பாலமுருகன் த/பெ. சுந்தரராஜ் என்பவருக்கு உடல்நலம் சரியில்லாத காரணத்தினால் வியாபாரம் செய்ய முடியவில்லை எனவும் தன்னுடன் கூட்டாக தொழில் நடத்திவந்த திரு.ராமச்சந்திரன் த/பெ. கிருஷ்ணன் என்பவர் வசம் மேற்படி கடையின் முழு பொறுப்புகளையும் ஒப்படைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்படி கடைக்கு வாடகை நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளது. எனவே, புதிய பேருந்து நிலையம் அருகில் தென்புறம் உள்ள கடை எண்.24, வரிவிதிப்பு எண்.336ஐ திரு.பாலமுருகன் த/பெ. சுந்தரராஜ் என்பவரது பெயரிலிருந்து திரு.ராமச்சந்திரன் த/பெ. கிருஷ்ணன் என்பவரது பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய வருவாய் ஆய்வாளர் பரிந்துரை செய்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>1. அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.2007–ன்படிதெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி அனுமதியற்ற அனுபோகதாரர்களின் நேர்வில் ஒருமுறை மட்டுமே அளிக்கப்படும் சலுகை அடிப்படையில் குத்தகை உரிமையை பெயர்மாற்றிதர அனுமதிக்கப்பட்டுள்ளதற்கிணங்க திரு.பாலமுருகன் த/பெ. சுந்தரராஜ் என்பவரது பெயரிலிருந்து திரு.ராமச்சந்திரன் த/பெ. கிருஷ்ணன் என்பவரது பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி, குத்தகை உரிமத்தினை பெயர்மாற்றம் செய்வதற்காக மனுதாரர் திரு.ராமச்சந்திரன் த/பெ. கிருஷ்ணன் என்பவர் 12 மாதத்திற்கான வாடகை தொகைக்கு இணையான தொகையினை முன்பணமாகவும் 12 மாத வாடகை தொகைக்கு இணையான தொகையினை பெயர்மாற்ற கட்டணமாகவும் செலுத்தப்படவேண்டும்.<br>3. திரு.ராமச்சந்திரன் த/பெ. கிருஷ்ணன் என்பவர் பெயர்மாற்ற கட்டணம் ரூ.2500/- மற்றும் பெயர்மாற்ற விண்ணப்ப கட்டணமாக ரூ.500/- ஆகியவற்றினை செலுத்தப்பட்டபின்னர் இவ்வுரிம இனத்தினை பெயர்மாற்றம் செய்ய அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.6030/2019/அ2** | நகர்மன்றத் தீர்மான எண் 163 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 30-09-2019 | **பொருள் 17:** இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் அருகில் தென்புறம் உள்ள கடை எண்.18, வரிவிதிப்பு எண்.330 திரு.முகைதீன் பாரூக் த/பெ. ஷேக்கத்தலி பாவாஷா, என்பவர் குத்தகைக்கு எடுத்து நடத்திவருகிறார். திரு.முகைதீன் பாரூக் த/பெ. ஷேக்கத்தலி பாவாஷா மற்றும் திரு. அழகன் த/பெ. ராஜ், ஆகிய இருவரும் கடையை கூட்டாக தொழில் நடத்தி வந்ததாகவும் தற்சமயம் மேற்படி கடையின் குத்தகை உரிமத்தை தனது பெயரில் மாற்றி தரும்படி திரு. அழகன் த/பெ. ராஜ், என்பவர் 18.07.2019 அன்று விண்ணப்பம் அளித்துள்ளார். மேற்படி, விண்ணப்பத்துடன் திரு.முகைதீன் பாரூக் த/பெ. ஷேக்கத்தலி பாவாஷா மற்றும் திரு. அழகன் த/பெ. ராஜ், ஆகிய இருவரும் சேர்ந்து எழுதிக்கொண்ட உறுதிமொழி ஆவண பத்திரம் சான்று பெற்று நோட்டரி பப்ளிக் (Notary Public) வழக்கறிஞரிடம் சான்றொப்பம் பெற்று அளித்துள்ளார். மேற்படி, உறுதிமொழி பத்திரத்தில் தற்சமயம் திரு.முகைதீன் பாரூக் த/பெ. ஷேக்கத்தலி பாவாஷா, என்பவருக்கு உடல்நலம் சரியில்லாத காரணத்தினால் வியாபாரம் செய்ய முடியவில்லை எனவும் தன்னுடன் கூட்டாக தொழில் நடத்திவந்த திரு. அழகன் த/பெ. ராஜ், என்பவர் வசம் மேற்படி கடையின் முழு பொறுப்புகளையும் ஒப்படைக்க சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்படி கடைக்கு வாடகை நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளது. எனவே, புதிய பேருந்து நிலையம் அருகில் தென்புறம் உள்ள கடை எண்.18, வரிவிதிப்பு எண்.330ஐ திரு.முகைதீன் பாரூக் த/பெ. ஷேக்கத்தலி பாவாஷா, என்பவரது பெயரிலிருந்து திரு. அழகன் த/பெ. ராஜ், என்பவரது பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய வருவாய் ஆய்வாளர் பரிந்துரை செய்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**அலுவலக குறிப்பு**<br><br>அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்.03.07.2007—ன்படி தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படி அனுமதியற்ற அனுபோகதாரர்களின் நேர்வில் ஒருமுறை மட்டுமே அளிக்கப்படும் சலுகை அடிப்படையில் குத்தகை உரிமையை பெயர்மாற்றிதர அனுமதிக்கப்பட்டுள்ளதற்கிணங்க திரு.முகைதீன் பாரூக் த/பெ. ஷேக்கத்தலி பாவாஷா, என்பவரது பெயரிலிருந்து திரு. அழகன் த/பெ. ராஜ், என்பவரது பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய அனுமதிக்கலாம்.<br><br>**1.** மேற்படி, குத்தகை உரிமத்தினை பெயர்மாற்றம் செய்வதற்காக மனுதாரர் திரு. அழகன் த/பெ. ராஜ் என்பவர் 12 மாதத்திற்கான வாடகை தொகைக்கு இணையான தொகையினை முன்பணமாகவும் 12 மாத வாடகை தொகைக்கு இணையான தொகையினை பெயர்மாற்ற கட்டணமாகவும் செலுத்தப்படவேண்டும்.<br><br>**2.** திரு. அழகன் த/பெ. ராஜ் என்பவர் பெயர்மாற்ற கட்டணம் ரூ.2500/- மற்றும் பெயர்மாற்ற விண்ணப்ப கட்டணமாக ரூ.500/- ஆகியவற்றினை செலுத்தப்பட்டபின்னர் இவ்வுரிம இனத்தினை பெயர்மாற்றம் செய்ய அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண்.6028/2019/அ2** | நகர்மன்றத் தீர்மான எண் 164 அனுமதிக்கப்பட்டது |

30-09-2019

**பொருள் 18 :** இந்நகராட்சியின் **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019-2020** ஆம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்கண்ட விபரப்படி பணிகளுக்கு 19.09.2019 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை இறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019-20**

| **வ. எண்** | **பணியின் விவரம்** | **மதிப்பீடு தொகை (இலட்சம்)** | **வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம்** |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட அரணாரை பெரியசாமி கோவில் செல்லும் இணைப்பு சாலை அமைக்கும் பணி | 9.90 | திரு. M/s. ஏழுமலையான், கான்டிராக்டர் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (–) 0.09%<br>G. இக்பால் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.43% மதிப்பீட்டிற்கு அதிகம் | குறைந்த விலைப்புள்ளி அளித்த திரு. M/s. ஏழுமலையான், கான்டிராக்டர் பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் |

**அ.கு.**

**1.** மேற்கண்ட பணியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு. M/s. ஏழுமலையான், கான்டிராக்டர் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் அவர்களின் (–) 0.09 %, குறைந்த மதிப்பீட்டினை ஏற்கலாம். மேலும், மேற்கண்ட பணியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு. M/s. ஏழுமலையான், கான்டிராக்டர் ஒப்பந்ததாரர் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் : 006270/2019/இ1

நகர்மன்றத் தீர்மான எண் **165** அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 30-09-2019 | **பொருள் 19 :** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கிணற்று நீர் மற்றும் காவேரி தண்ணீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை மற்றும் உடைப்புகளை பழுது சீர் செய்ய உதிரி பாகம் மற்றும் ஆள் கூலி உட்பட பணி செய்திட ரூ.6.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைகு மன்றத்தின் அனுமதிக் வைக்கப்படுகிறது.<br>**அ.கு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேலும் மேற்கண்ட பணி குடிநீர் பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதியும் பொது நலன் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கைக்கு தொடரப்பட்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 5328/2019/இ2 | நகர்மன்றத் தீர்மான எண் 166 அனுமதிக்கப்பட்டது |
| 30-09-2019 | **பொருள் 20 :** பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட சொந்தமான திறந்த வெளி கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளில் மற்றும் ஆழ்துளை கிணறுகளில் உள்ள மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை பழுது சீர் செய்யும் பணிக்கு ரூ.10.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அ.கு<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 7675/2019/இ2 | நகர்மன்றத் தீர்மான எண் 167 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 30-09-2019 | **பொருள் 21 :** திரு. குமார் மற்றும் 21 நபர்களுக்கு முகவராக திரு. பி. அன்புதுரை என்பவர் நகராட்சிக்கு எதிராக மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் வழக்கு எண். 193/2019 மற்றும் I.A.No.2/2019–ல் வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கு குறித்து நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு. டி. பாலமுருகன் என்பவரை ஆஜராக கோரவும் இவ்வழக்கிற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 25000/- மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br><br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.7356/2019/F1 | நகர்மன்றத் தீர்மான எண் 168 அனுமதிக்கப்பட்டது |

30-09-2019

**பொருள் 22 :** இந்நகராட்சியின் பொது நிதி 2019-2020 ஆம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்கண்ட விபரப்படி பணிகளுக்கு 20.09.2019 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை இறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

பொது நிதி 2019-2020

| **வ. எண்** | **பணியின் விவரம்** | **மதிப்பீடு தொகை (இலட்சம்)** | **வரப்பெற்ற ஒப்பந்துபுள்ளியின் விவரம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம்** |
|---|---|---|---|---|
| 1 | பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1,4,7,10,11 மற்றும் 12 ல் கூடுதல் பகிர்மான குடிநீர் குழாய் அமைக்கும் பணி | 8.20 | G. கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (–) 0.27% மதிப்பீட்டிற்கு குறைவு | குறைந்த விலைப்புள்ளி அளித்த G. கண்ணன் பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் |
| | | | K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.71% மதிப்பீட்டிற்கு அதிகம் | |

அ.கு.

**1.** மேற்கண்ட பணியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த G. கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் அவர்களின் **(–)** 0.27 %, குறைந்த மதிப்பீட்டினை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்**.**

ந.க.எண் : 005828/2018/இ1

நகர்மன்றத் தீர்மான எண் 169 அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 30-09-2019 | **பொருள் 23 :** இந்நகராட்சியின் பொது நிதி 2019-2020 ஆம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்கண்ட விபரப்படி பணிகளுக்கு 20.09.2019 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை இறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. | நகர்மன்றத் தீர்மான எண் 170 அனுமதிக்கப்பட்டது |

பொது நிதி 2019-2020

| **வ. எண்** | **பணியின் விவரம்** | **மதிப்பீடு தொகை (இலட்சம்** | **வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம்** |
|---|---|---|---|---|
| 1 | பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் குழாய்களில் ஏற்பட்ட பழுதுகளை பழுது சீர் செய்யும் பணி | 6.00 | G. கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (–) 0.19% மதிப்பீட்டிற்கு குறைவு | குறைந்த விலைப்புள்ளி அளித்த G. கண்ணன் பெரம்பலூர் மதிப்பீட்டினை ஏற்கலாம் |
| | | | K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.27% மதிப்பீட்டிற்கு அதிகம் | |

அ.கு.

1. மேற்கண்ட பணியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த G. கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் அவர்களின் (–) 0.19 %, குறைந்த மதிப்பீட்டினை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் : 005328/2018/இ1

| | | |
|---|---|---|
| 30-09-2019 | **பொருள் 24 :** பெரம்பலூர் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 1 ல் சமுத்துவபுரத்தில் உள்ள நகர்புற வாழ்வாதார மையத்தில் விடுப்பட்ட பணிகளான குடிநீர் பணி பாதாள சாக்கடை இணைப்பு மற்றும் ஜன்னல் பகுதிகளில் கொசு வலை மரச்சட்டம் மழைநீர் சேகரிப்பு பழுதான குழாய்களை பழுது சீர் செய்யும் பணி பெயர் பலகை அமைத்தல் போன்ற பணிகள் செய்திட ரூ.1.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அ.கு<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க.எண் : 7026/2019/இ1 | நகர்மன்றத் தீர்மான எண் 171 அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>30-09-2019</td>
<td>

**பொருள் 25 :** இந்நகராட்சியின் பொது நிதி 2019-2020 ஆம் ஆண்டு நிதியிலிருந்து கீழ்கண்ட விபரப்படி பணிகளுக்கு 20.09.2019 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை இறுதி செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><td colspan="5">பொது நிதி 2019-2020</td></tr>
<tr><td>வ. எண்</td><td>பணியின் விவரம்</td><td>மதிப்பீடு தொகை (இலட்சம்)</td><td>வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியின் விவரம்</td><td>குறைந்த ஒப்பந்தப்புள்ளியின் விவரம்</td></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 12,16,19 ஆகிய பகுதிகளில் உள்ள சிறிய கிணற்றினை தூர் வாரும் பணி</td><td rowspan="2">1.20</td><td>G. கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் (–) 0.22%</td><td rowspan="2">குறைந்த விலைப்புள்ளி அளித்த G. கண்ணன் பெரம்பலூர்மதிப்பீட்டினை ஏற்கலாம்</td></tr>
<tr><td>K. காமராஜ் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் 0.78% மதிப்பீட்டிற்கு அதிகம்</td></tr>
</table>

**அ.கு.**

1. மேற்கண்ட பணியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த G. கண்ணன் ஒப்பந்ததாரர் பெரம்பலூர் அவர்களின் (–) 0.22 %, குறைந்த மதிப்பீட்டினை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் : 005327/2018/இ1

</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண் 172 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 30-09-2019 | **பொருள் 26 :** இந்நகராட்சியின் 2006-07 ஆம் நிதியாண்டு முதல் 2016-2017 நிதியாண்டு வரையிலான தணிக்கைக்குரிய கணக்குகள் தொடர்பான கோப்புகள் திரு.A.R.திருவேங்கடம், தனியார் நிதி ஆலோசகரை (Financial Consultant) கொண்டு கணக்கு முடிக்கப்பட்டு தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>தற்போது மேற்படி, திரு.A.R.திருவேங்கடம், தனியார் நிதி ஆலோசகர் (Financial Consultant) அவர்களை கொண்டு 2017-2018 ஆம் நிதியாண்டிற்கான தணிக்கைக்குரிய கணக்குகள் தொடர்பான கோப்புகள் தயார்செய்து தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்பொது 2018-2019 ஆம் நிதியாண்டிற்கான தணிக்கைக்குரிய கணக்குகள் தொடர்பான கோப்புகள் தயார்செய்யும் பணி அன்னாரைகொண்டு துவங்கப்பட்டுள்ளது.<br><br>எனவே, 2017-18 மற்றும் 2018-19 ஆம் நிதியாண்டிற்கான தணிக்கைக்குரிய கணக்குகள் தொடர்பான கோப்புகள் தயார் செய்ய திரு.A.R.திருவேங்கடம், தனியார் நிதி ஆலோசகர் அவர்களை கொண்டு பணியினை மேற்கொள்ளவும் (Financial Consultant) அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கட்டணங்களுக்குரிய உத்தேச செலவினம் ரூ.1,00,000/-க்கு இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசரம் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதிபெற்று 2017-2018–ம் ஆண்டு கணக்கு தொடர்பான பணியினை மேற்படி நிதி ஆலோசகரை கொண்டு மேற்கொண்டதற்கும் தற்போது 2018-2019–ம் ஆண்டின் தணிக்கைக்குரிய கணக்கு தொடர்பான பணியினை மேற்கொள்ளவும் திரு.A.R.திருவேங்கடம், தனியார் நிதி ஆலோசகர் (Financial Consultant) அவர்களுக்கு தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.0920/2016/B1 | நகர்மன்றத் தீர்மான எண் 173 அனுமதிக்கப்பட்டது |

// ஒம் // திரு . ஆர், ராதா, பி.இ.,
தனி.அலுவலர் / ஆணையாளர்( பொ)
பெரம்பலூர் நகராட்சி